## தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் அவமதித்து அத்துமீறும்

# ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்!



ஆளுநர் ஆர்.என் ரவியைக் கண்டித்து, தலைமைக் கழக அறிவிப்பின்படி நீலகிரி மாவட்டம் உதகையில் மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமதிக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., உரையாற்றி னார். உடன் கழக மருத்துவர் அணி துணைத் தலைவர்டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி. கோ.கண்ணன், ஆர்.ராஜ சேகர், இரா.ஸ்ரீதரன், ஆர்.சிவானந்தம், ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார். எஸ்.பன்னீர் செல்லம், டி.எ.தட்சணாமூர்த்தி, ந.பாண்டுரங்கள், பிரியா விஜயாங்கன். கலோகநாதன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியையும் கண்டித்து தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.சிவானந்தம், குமுதா குமார், துரை மஸ்தான் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநர் ஆர்.என்.ரவியை கண்டித்து திருமங்கலத்தில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். உடன் கழக நிர்வாகிகள், திரளான கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.




திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா அலுவலகம் எதிரில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும் ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழகத்தினர் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.



ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் காந்திபுரம், டாடாபாத், பவர் ஹவுஸ் அருகில், மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் தலைமையில் ஆளுநரின் அநாகரீகத்தைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வடக்கு மாவட்டச் செயலாளர் தொஅ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி,கோவை மாநகர் மாவட்ட, வடக்கு மாவட்ட, தெற்கு மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜென்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் புதுக்கோட்டை வடக்கு,தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 07.01.2025 காலை 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை திலகர் திடலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் 5000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் தமிழ் மொழியை தொடர்ந்து அவமதிப்பு செய்யும் ஆளுநர் ரவியைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.இதில் மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், கொள்கைப் பரப்பு துணை துணை செயலாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், முன்னாள் எம்.எல்.ஏ. ஞானசேகரன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் நூருல்லா, என்.சுப்பிரமணி, மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்ட கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் – காஞ்சிபுரத்தில் தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் அவமதிக்கும் ஆளுநரைக் கண்டித்து நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் கண்டன முழக்கமிட்டு உரையாற்றினார். உடன் இளைஞரணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட கழக நிர்வாகிகள் டிவி கோகுல கண்ணன், திருமதி மலர்விழி, சன் பிரண்டு கே.ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




விருதுநகரில் வடக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நகரச் செயலாளர் எஸ் ஆர் எஸ் தனபாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.